1999 மார்ச் 30] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

அவருடைய குடும்பத்தாருக்கும் அவருடைய தொகுதி மக்களுக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அன்னாருடைய குடும்பத்திற்கு ஏனைய உறுப்பினர்கள் வலியுறுத்தியதைப்போல ஒரு தக்க பாதுகாப்பு, குடும்ப நிதியாக 5 இலட்சம் ரூபாயை வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மாமன்றத்தில் எதிர்வரிசையில் எந்நேரமும் என்னுடைய பார்வையிலே படுகின்ற அளவிற்கு அமர்ந்திருந்த அன்புக்குரிய நண்பரும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினருமான ஆண்டி அம்பலம் அவர்கள் மறைந்த செய்தி நேற்று காலையிலே கிடைத்தவுடன் நாம் அனைவருமே பதறிப் போனோம். அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றுமுள்ள கட்சிகளின் தலைவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல, அடக்கத்தின் மொத்த உருவமாக, நல்ல இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் மறைந்த ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள். ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்து எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டியதைப் போல, அவருடைய பெயருக்கு ஏற்றாற்போல ஓர் ஆண்டியாகவே அரசியலிலே வாழ்ந்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு.

தொகுதி மக்களிடத்திலே அவர் சார்ந்திருந்த கட்சிக்கு உள்ள செல்வாக்கைவிட தனிப்பட்ட முறையிலே அவருக்குள்ள செல்வாக்கு கட்சிக்கும் பயன்பட்டது என்பதை அவருடைய கட்சியிலே உள்ளவர்களே மறுக்கமாட்டார்கள். அந்த அளவுக்குத் தனிப்பெரும் செல்வாக்கோடு அந்தத் தொகுதியிலே வாழ்ந்தவர். இன்னமும் அந்தத் தொகுதி மக்களுடைய நெஞ்சங்களிலே மறையாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள்.

அவர் அரசியலிலே மாத்திரமல்லாமல், ஆன்மீகத் துறையிலும், சமுதாயத் துறையிலும் ஆழ்ந்த பற்று கொண்டு அந்தப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பெருந்தகை ஆவார்கள். என்னைச் சந்திக்கின்ற நேரத்தில் எல்லாம் ஒரு முறையீடு--தொகுதியைப் பற்றிய

நிலைகளை விவரித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கின்ற அளவிலே--வழங்குவது அவருடைய வாடிக்கை. அவற்றில் பலவற்றை அரசின் சார்பில் நிறைவேற்றிக் கொடுத்தாலும்கூட, பலவற்றை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருந்தாலும்கூட அதற்கான விளக்கங்களை அளிக்கின்ற நேரத்திலே, அவை முன்னவர் குறிப்பிட்டதைப்போல, அதுகேட்டு ஆறுதல் அடையக்கூடியவர்; அதை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்; அதற்காக சற்றும் சீற்றம் கொள்ளாதவர்; வருந்தாதவர். அவர் இளமைக் காலத்திலேயிருந்து துடிப்பான ஓர் இளைஞராகத் திகழ்ந்து பல்வேறு தேகப் பயிற்சிகள், விளையாட்டுக்கள் இவற்றிலே ஈடுபாடு கொண்டு உடல் ஆரோக்கியத்தையும் நல்ல முறையிலே பாதுகாத்து வந்தவர்தான். எனினும் திடீரென்று இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. ஒரு பெரிய குடும்பம் அவருடைய குடும்பம் என்பதை இங்கு உள்ளவர்கள் எல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

*முற்பகல் 10–25*

நல்ல எளிமை, அதே அளவுக்குப் பழகுவதிலே இனிமை. இந்தச் சட்டமன்றத்திலே என்றைக்காவது ஒரு நாள் உரத்த குரலிலே பேசி யாரையும் புண்படுத்தினார் என்ற நிலை என்றைக்குமே இல்லை என்ற அளவிற்கு. அவர் தொடர்ந்து 25 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்த அவையிலே பணியாற்றினாலும்கூட, அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற அந்த வாய்ப்பைப் பெற்றுள்ள நாங்கள் எல்லாம்கூட, அத்தகைய ஒரு சூழ்நிலை என்றைக்கும் உருவானதைக் கண்டதில்லை. அந்த அளவிற்கு உங்களுடைய உள்ளம் எல்லாம் கவர்ந்த ஒரு பெரியவர் மறைந்த ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள்.

அவருடைய குடும்பத்தைப் பற்றியும், அதற்குச் செய்ய வேண்டிய உதவிகளைப் பற்றியும் இங்கே எடுத்துக் கூறப்பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் கேட்டுக்கொள்வேன். இதுபோன்ற ஒரு பெரிய துக்க சம்பவம் நடைபெற்று, அந்தத் தலைவருக்காக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றுகிற நேரத்தில், அவரைப் பற்றிய குறிப்புகள்தான் அவைக் குறிப்பிலும், ஏடுகளிலும், ஏறவேண்டுமேயல்லாமல், வேறு--அவை சாராத வேறு--குறிப்புகள், அவருடைய குடும்பத்தைப் பற்றி, நிதியுதவி போன்ற கோரிக்கைகளை எழுப்பினால், ஆண்டி அம்பலம் என்ற ஒரு பெரியவருடைய

*1999 மார்ச் 30*] [கலைஞர் மு. கருணாநிதி]

மறைவு, மறைந்துபோய், திசை திருப்பப்பட்டு, வேறு திசையிலே சென்று விடும் என்கின்ற ஆதங்கம் எனக்கு உண்டு. எனவே இந்த மாமன்றத்திலே பணியாற்றுகின்ற உறுப்பினர்களுடைய மறைவு, அதன் காரணமாக எழுகின்ற சூழ்நிலை, இவற்றைப் பற்றியெல்லாம் பேச, முடிவுகளை எடுக்க, மாநில சட்டமன்ற மானியம் வருகின்ற நேரத்தில் பொதுவாக அதைப்பற்றிப் பேசலாம் என்ற அந்தக் கருத்தை மாத்திரம் சொல்லி--இல்லையேல், பலரும் எடுத்துச் சொன்ன கருத்தை நான் அலட்சியப்படுத்திவிட்டேனோ என்று யாரும் கருதக்கூடாது என்பதற்காக, இன்றைக்கு ஒரே தீர்மானம்--ஆண்டி அம்பலம் அவர்களுடைய மறைவுக்காக நிறைவேற்றிய அனுதாபத் தீர்மானம் என்ற வகையிலே, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கு, உற்றார் உறவினருக்கு, அந்தத் தொகுதி மக்களுக்கு, அவர் சார்ந்த இயக்கமான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு, அதன் தலைவருக்குத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய இரங்கலையும், பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்.)*

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை *(31-3-1999)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை காலை *10-28* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.